1993 மார்ச் 18]

வினா எண் 126, திரு. அ. பாப்பா சுந்தரம், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

126—

குளித்தலையில் மண்டலப் போக்குவரத்து அலுவலகம்.

*9220—திரு. அ. பாப்பா சுந்தரம் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலையில் மண்டல போக்குவரத்து அலுவலகப் பிரிவு திறக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) குளித்தலையில் ஒரு பகுதி அலுவலகம் துவங்குதல் குறித்த ஒரு கருத்துரு பரிசீலனையில் உள்ளது.

(ஆ) தமிழ்நாடு முழுவதும் வாகனங்களின் அடிப்படையில் பகுதி அலுவலகங்கள் துவங்குதல் குறித்து விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வு முடிந்ததும் வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அந்த இடங்களில் உள்ள போக்குவரத்து தொடர்பாக முக்கியத்துவம் ஆகியவைகளை அறிந்து பகுதி அலுவலகங்கள் திறப்பது குறித்து முடிவு மேற்கொள்ளப்படும்போது குளித்தலையில் பகுதி அலுவலகம் திறப்பது குறித்து முடிவெடுக்கப்படும்.

திரு. அ. பாப்பா சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் போக்குவரத்தை ஆராய்ந்து அந்தப் பகுதியிலே மண்டலப் பகுதி அலுவலகத்தைத் திறக்க ஆவன செய்யப்படும் என்று உறுதி அளித்திருக்கிறார்கள். நான் அவர்களுக்கு சொல்லிக் கொள்வதெல்லாம் குளித்தலை, கரூருக்கும் திருச்சிக்கும் இடையிலே 50 கிலோ மீட்டர் மையப் பகுதியிலே இருக்கிறது. அங்கு நிறைய போக்குவரத்து வாகனங்கள் இருக்கின்றன. ஆகவே அந்த வாகனங்களை எல்லாம் திருச்சிக்கும் கரூருக்கும் கொண்டு செல்லும்போது விவசாயிகளுக்கும் மற்றும் வாகனம் வைத்திருப்பவர்களுக்கும் மிகவும் இடையூறாக இருப்பதால் பக்கத்திலே இருக்கிற முசிறி தொகுதி தொட்டியம் தொகுதி போன்ற 3, 4 தொகுதிகளுக்கு குளித்தலை மையப் பகுதியாக இருப்பதால் அதை ஆராய்ந்து அது எப்போது துவக்கப்படும் என்பதைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஆற்றல் மிக்க முதலமைச்சராக இந்தியாவிற்கே ஒரு வழிகாட்டியாகத் திகழ்ந்து கொண்டிருக்கிற நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே தான் 10 ஆயிரம் வாகனங்கள் பதிவு செய்தாலே பகுதி அலுவலகம் திறக்கப்பட வேண்டுமென்று நாம் முடிவு செய்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே தான் இதை ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். எதிர்காலத்தில் மிக விரைவிலே குளித்தலையிலே பகுதி அலுவலகம் திறக்கப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி தெரி வித்துக் கொண்டு விரைவிலே குளித்தலையிலே திறப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு செய்ய முற்படுவார்களா என்பதை அறிய விரும்பி அமர்கிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வு முடிந்த உடனேயே அந்தப் பணிகள் துவக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 127, திரு. என். ஆர். சிவபதி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

127—

காட்டுப்புத்தூரிலிருந்து சென்னைக்கு திருவள்ளுவர் போக்கு வரத்துக் கழகப் பேருந்து விடுதல்.

*9793—திரு. என். ஆர். சிவபதி : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொட்டியம் தொகுதி, காட்டுப்புத்தூரிலிருந்து சென்னைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் புதிய பேருந்து இயக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் துவங்கப்படும் ?